# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.2, தியாகராயர் சாலை, (ஆலையம்மன் கோவில் அருகில்), எல்டாம்ஸ் ரோடு சந்திப்பு,
தேனாம்பேட்டை, சென்னை - 600 018. தொலைபேசி எண். 24347590

**ஆணை நாள் – 04.11.2020**

**முன்னிலை**

**திரு. சு.முத்துராஜ், பி.ஏ., பி.எல்.,**
**மாநிலத் தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண்கள். SA 3796/D/2019 & SA 3797/D/2019**

திரு. V. ஜான் சகாய ஆல்பர்ட் --- மேல்முறையீட்டாளர்

/எதிர்/

1. பொதுத் தகவல் அலுவலர் / தலைமையாசிரியர்,
RC மாதிரி துவக்கப்பள்ளி, கருமத்தம்பட்டி,
கோயமுத்தூர் - 641 659.

--- பொது அதிகார அமைப்புகள்

2. பொதுத் தகவல் அலுவலர் / தலைமையாசிரியர்,
புனித மரியன்னை உயர்நிலைப்பள்ளி, கருமத்தம்பட்டி,
கோயமுத்தூர் - 641 659.

பார்வை:

| | SA 3796/D/2019 | SA 3797/D/2019 |
|---|---|---|
| மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம் பிரிவு 6(1)-ன்கீழ் மனு செய்த நாள் | 15.10.2018 | 15.10.2018 |
| பிரிவு 19(1)-ன் கீழான முதல் மேல்முறையீட்டு மனுவின் நாள் | 04.12.2018 | 04.12.2018 |
| பிரிவு 19(3)-ன் கீழான இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் நாள் | 22.04.2019 | 22.04.2019 |

****

**ஆணை**

தமிழ்நாடு அரசால் COVID-19 காரணமாக ஊரடங்கு (LOCK DOWN) பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில், தமிழ்நாடு தகவல் ஆணையத்தில் நேரடியாக விசாரணை செய்ய இயலாததால், இன்று (04.11.2020) தொலைபேசி வாயிலாக தொடர்புகொண்டு விசாரணை மேற்கொள்ளப்பட்டது. இந்த விசாரணையில் மனுதாரர் திரு. திரு. V. ஜான் சகாய ஆல்பர்ட் மற்றும் பொதுத் தகவல் அலுவலர்கள் திருமதி. சாந்தி, தலைமையாசிரியர், RC மாதிரி துவக்கப்பள்ளி, கருமத்தம்பட்டி, கோயமுத்தூர் மாவட்டம் மற்றும் திரு. D.பிரின்ஸ் ஹென்றி விக்டர், தலைமையாசிரியர், புனித மரியன்னை உயர்நிலைப்பள்ளி, கருமத்தம்பட்டி கோயமுத்தூர் மாவட்டம் இன்றைய தொலைபேசி விசாரணையில் பங்கேற்றனர்.

2. மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, சட்டப்பிரிவு 6(1)-ன்கீழ் கோயமுத்தூர் மாவட்டம் RC மாதிரி துவக்கப்பள்ளி மற்றும் புனித மரியன்னை உயர்நிலைப்பள்ளி அலுவலகப் பொதுத் தகவல் அலுவலர்களுக்கு அனுப்பியுள்ள மனுக்களில், RC மாதிரி துவக்கப்பள்ளியில் பணிபுரியும் பொது ஊழியர்களின் முழு விவரம் மற்றும் பணி பதிவேட்டின் ஒளிநகல், இவர்கள் பணியில் சேரும்போது அரசுக்கு கொடுத்துள்ள சொத்து விவரம் மற்றும் ஐந்து ஆண்டுக்கொருமுறை அரசுக்கு கொடுத்த சொத்து விவரங்களின் ஒளி நகல், இவர்களின் அசையும் மற்றும் அசையா சொத்துக்களின் முழு விவரம், சொத்துக்களை வாங்குவதற்கு நிர்வாகத்திடம் முன் அனுமதி பெறப்பட்டிருப்பின் அவற்றின் நகல், பள்ளியில் பராமரிக்கப்பட்டு வரும் ஆவணங்களின் விவரம், பள்ளியில் கடந்த 15.10.2016 முதல் 25.10.2016 வரையிலான பொது ஊழியர்களின் வருகைப் பதிவேட்டின் ஒளிநகல் மற்றும் விடுமுறை விண்ணப்பங்களின் ஒளிநகல் உள்ளிட்ட முழு விவரங்களின் ஆவண நகல்கள் மற்றும் தகவல்களாக வழங்கக் கோரியுள்ளார்.

3. மனுதாரர் ஒரே பொருள் குறித்து தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 6(1) மற்றும் 19(1)-ன் கீழ் தனித்தனியே தாக்கல் செய்துள்ள மனுக்களுக்கு, தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 19(3)-ன் கீழான தமது இரண்டு இரண்டாவது மேல்முறையீட்டு மனுக்களை மேற்குறிப்பிட்டவாறு தனித்தனியே இவ்வாணையத்தில் தாக்கல் செய்துள்ளனர். மனுதாரர் இரண்டு இரண்டாவது மேல்முறையீட்டு மனுக்களும் இன்று (04.11.2020) ஒருசேர தொலைபேசி வாயிலான விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன.

4. இன்றைய தொலைபேசி வாயிலான விசாரணையில் பங்கேற்ற மனுதாரர் தனக்கு நாளதுவரை தகவல்கள் வழங்கப்படவில்லை என்று தெரிவித்தார். விசாரணையில் பங்கேற்ற பொதுத் தகவல் அலுவலர், மனுதாரரின் மனுவில் கோரிய தகவல்களான, இந்த நிர்வாகத்தில் பணியாற்றுகின்ற ஆசிரியர்கள் மற்றும் பணியாளர்களின் அசையும் மற்றும் அசையா சொத்துகளின் விவரங்களை வழங்கக் கோரியுள்ளார் என்றும், மனுதாரர் ஒட்டு மொத்தமாக பள்ளியில் பணிபுரிபவர்களுடைய சொத்து விவரங்கள் குறித்து அனைத்து ஆவணங்களையும் கோருவதால், அவற்றில் சில பிரச்சினைகள் இருப்பதாகவும், மேலும், மனுதாரர், எந்த ஆசிரியரின் சொத்து மதிப்பு மற்றும் எந்த பணியாளரின் சொத்து மதிப்பு வேண்டுமென்பதை குறிப்பிட்டு கோரும்பட்சத்தில், அவருக்கு தகவல்கள் வழங்கத் தயாராக இருப்பதாக பொதுத் தகவல் அலுவலர் தெரிவித்தார்.

5. இன்றைய தொலைபேசி வாயிலான விசாரணையின் முடிவில், தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் கீழ் வழங்கக் கூடிய தகவல்களை மனுதாரர் குறிப்பிட்டுக் கோரும் பட்சத்தில் தகவல்கள் வழங்கப்படும் என்று பொதுத் தகவல் அலுவலரால் தெரிவிக்கப்பட்ட விளக்கத்தை இவ்வாணையம் ஏற்றுக் கொண்டு, இம்மேல்முறையீட்டு மனுவின் மீதான விசாரணையை இவ்வாணையம் இத்துடன் முடித்துக் கொள்கிறது. மேலும், மனுதாரர், அப்பள்ளியில் பணிபுரியும் ஒரு ஆசிரியரை பற்றி தகவல் பெறுவது தான் மனுதாரரின் நோக்கம் என்பது பொது அதிகார அமைப்பிடம் விசாரணை மேற்கொண்டபோது தெரியவந்தது. மனுதாரர், பள்ளியில் உள்ள அனைத்து ஆசிரியர்களின் தகவல்களை ஒட்டுமொத்தமாக கோருவதால், சொந்த பிரச்சினையை ஒட்டுமொத்த பிரச்சினையாக மாற்றுவதை தவிர்க்குமாறு மனுதாரருக்கு இதன் மூலம் அறிவுறுத்தப்படுகிறது.

**ஒம்/- (சு. முத்துராஜ்)**
**மாநிலத் தகவல் ஆணையர்**

**(ஆணையத்தின் ஆணைப்படி)**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண்கள். SA 3796/D/2019 & SA 3797/D/2019</u>**

பெறுநர்

**<u>பொது அதிகார அமைப்புகள்:-</u>**

1. பொதுத் தகவல் அலுவலர் / தலைமையாசிரியர்,
   RC மாதிரி துவக்கப்பள்ளி, கருமத்தம்பட்டி,
   கோயமுத்தூர் - 641 659.

2. பொதுத் தகவல் அலுவலர் / தலைமையாசிரியர்,
   புனித மரியன்னை உயர்நிலைப்பள்ளி, கருமத்தம்பட்டி,
   கோயமுத்தூர் - 641 659.

**<u>மனுதாரர்:-</u>**

திரு. V. ஜான் சகாய ஆல்பர்ட்,
எண்.12/36, J, விவேகானந்தர் வீதி,
கிருஷ்ணாபுரம், சோமனூர் அஞ்சல்,
கோயமுத்தூர் - 641 668.

Copy to: SA 3796/D/2019 & SA 3797/D/2019
SNPA 06.11.2020